# வேலணையில் கடும் விமானத் தாக்குதல் இராணுவம் ஊர்காவற்றுறையில் நிலை

மண்டைதீவில் இருந்து வெளியேறும் இராணுவத்தினருக்கு பாதுகாப்பு அளிக்கும் நோக்குடன் வேலணைப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை முதல் நண்பகல் வரை பொம்மர்கள், ஹெலிகப்டர்கள், அவ்ரோ விமானங்களும் பாரிய தாக்குதல்களை நடாத்தின. இதனால் வேலணைப் பிரதேச சபை, ஆயுர்வேத ஆஸ்பத்திரி, தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கக் கட்டிடம், மின்சாரசபை[illegible]தி, சில பாடசாலைகள், கிறிஸ்தவ தேவாலயம் என்ப[illegible]பலத்த சேதமடைந்தன. சிலர் காயமடைந்தனர். ஒருவர் மரணமானார். மக்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்ததால் உயிர்ச்சேதங்கள் பெருமளவு ஏற்படவில்லை. முன்னர் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் சேதமான கட்டிடங்கள் மீதும் இத்தாக்குதல்கள் இடம்பெற்றதால் அவை மேலும் சேதமடைந்தன. தற்போது இராணுவத்தினர் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிப் பகுதியில் நிலை கொண்டுள்ளனர். (24-ரு)


பக்கங்கள் நான்கு — விலை ரூபா:- 3-50

# முரசொலி

முரசு 04 ஒலி 229 ஞாயிறு 30-09-1990 (புரட்டாதி 14) ற.அவ்வல் 10


# யாழ் மாவட்டத்தில் இன்று முதல் புதியமுறை இலவச உணவு பங்கீடு

யாழ். மாவட்டத்தில் உள்ள ஆயிரத்து ஐநூறு ரூபாவுக்கு குறைந்த வருமானம் பெறும் சகலருக்கும் இலவச உணவுப் பொருட்களை வழங்குவதோடு முன்னர் தீர்மானிக்கப்பட்ட பங்கீட்டு அளவிலும் கூடிய அளவு பொருட்களை இன்று முதல் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான உயர்மட்டக் கூட்டம் நேற்று யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிறட் தலைமையில் நடைபெற்றபோது இம்முடிவு எடுக்கப்பட்டது.

இதன்படி குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு இலவச உணவுப் பொருட்

—04ஆம் பக்கம் பார்க்க

## இந்த யுத்தமும் அரசாங்கமும் சிங்கள தொடர்பு சாதனங்களும்

''அடுப்புத் தொடர்ந்து எரிந்துகொண்டிருந்தால் தான் தண்ணீரின் இயலாமையும், சட்டியின் ஏலாமையும் தெரிய வரும்''

''வலது கையால் பசிக்குப் பிச்சையும் இடது கையால் சுடத் துப்பாக்கியும் கேட்கும் எவருக்கும் இரண்டுமே கிடைப்பது சிரமமே''

— இக்கூற்றுக்களின் உட்பொருளை உய்த்துணர, எமது அரசியல் விமர்சகர் க. மா. இராசையா அவர்கள் எழுதும் குறிப்புக்களைத் தொடர்ந்து வாசியுங்கள்!

— பக்கம் 3

## இலவச உணவு விநியோகம்: 7-ம் திகதிக்குள் சகல கூட்டுறவுச் சங்கங்களும் முடிக்க வேண்டும்

விடுதலைப்போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படும் இவ்வேளையில் மக்களை பசி, பட்டினியில் இருந்து பாதுகாக்கும் பொறுப்பு சகல பல நோ. கூ. சங்கங்களையும் சார்ந்தது என தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி உணவு கூட்டுறவு துறைப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல சங்கங்கள் இந்நிலைப்பாட்டை அறிந்து சிறப்பாக கடமையாற்றிய போதிலும் ஒரு சில சங்கங்கள் இதனை உணராமல் இருப்பது வேதனைக்குரியது.

ஊரடங்கு, விமானத்தாக்குதல்கள் என்பவற்றைக் காரணம் காட்டி கிளைகளை குறித்த நேரத்துக்கு முன்பு

—04ஆம் பக்கம் பார்க்க

## பாராளுமன்றத்தில் ரஞ்சன்

## வாசுதேவ நாணயக்கார புலிகளின் ஆதரவாளர்

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் விமானத்தாக்குதல்கள் குறித்து பாராளுமன்றத்தில் நவசமசமாஜகட்சித்தலைவர் வாசுதேவ நாணயக்கார பேசியபோது அமைச்சர் ரஞ்சன் விஜயரட்னாவுக்கும் நாணயக்காரவுக்கும் இடையில் கடுமையானவாக்குவாதம் ஏற்பட்டது.

அப்பாவி மக்களை கொல்

—04ஆம் பக்கம் பார்க்க

## திருமலை வீடுகளின் வாசலில் தங்குவோர் பெயர்ப் பட்டியல்

திருகோணமலை நகரில் உள்ள தமிழர்களின் வீடுகளில் அங்கு தங்கியிருப்பவர்களின் பெயர்ப் பட்டியல்களை வீட்டு வாசல்களில் தொங்கவிடப்பட வேண்டும் என ஆயுதப்படையினர் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

திடீரென படையினர் ஒரு

—04 ஆம் பக்கம் பார்க்க

## வாகன உரிமையாளர்களுக்கு

இன்று பிற்பகல் 3-00 மணிக்கு யாழ். மாவட்டத்தில் உள்ள லொறி மற்றும் உழவு யந்திர உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சகல லொறி, உழவு யந்திர உரிமையாளர்களையும் கலந்துகொள்ளுமாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினர் கேட்டுக் கொள்கின்றனர். (71—ரு)

## நெடுந்தீவு படகுச்சேவையை ஆரம்பிக்கக் கோரிக்கை

நெடுந்தீவுக்கான படகுச் சேவையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய பரிபாலன சபையின் செயலாளர் திரு ஆ. நடராசா கடற்படை உயர் அதிகாரியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

—04ஆம் பக்கம் பார்க்க

## கோட்டையில் மேலும் சில ஆயுதங்கள் மீட்பு

யாழ். கோட்டையை விடுதலைப்புலிகள் கைப்பற்றிய பின்னர் கோட்டையினுள் இருந்து மேலும் ராணுவத்தினரின் சில ஆயுதங்கள் புலிகளால் மீட்கப்பட்டுள்ளது

மீட்கப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு;- கண்ணி வெடி - 210, 60 எம். எம். மோட்டார் ஷெல்-2, 81 எம். எம். மோட்டார் ஷெல் -17,

—04 ஆம் பக்கம் பார்க்க

## நகர மக்கள் திரும்புகிறார்கள்

யாழ்ப்பாண நகரில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களால் இடம்பெயர்ந்து சென்றவர்களில் சிலர் மீண்டும் தத்த[illegible]வீடுகளுக்கு நேற்று முதல் வரத்தொடங்கியுள்ளனர்.

குருநகர், மற்றும் கோட்டையைச் சூழவுள்ள பகுதிகளில் உள்ள வீடுகள் சேதமடைந்துள்ளதால் அவற்றை துப்புரவு செய்வதில் அவர்கள்

—04ஆம் பக்கம் பார்க்க

## சங்குப்பிட்டிக் கடலில் இருந்து 5 சைக்கிள்கள் மீட்பு

சங்குப்பிட்டிக் கடலில் இருந்து ஐந்து சைக்கிள்கள் அப்பகுதியில் தொழில் செய்து வரும் மீனவர்களினால் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சைக்கிள்கள் விடுதலைப் புலிகளின் அறுகுவெளிபிரதேசக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டன.

கடந்த மாதம் சங்குப்பிட்டித்துறைக் கடலில் மூழ்க

—04ஆம் பக்கம் பார்க்க

## கிளி. மாவட்ட வாசகர்கள் கவனத்திற்கு

வாசகர்களே! உங்கள் அபிமான ''முரசொலி'' தினசரியின் விலை ரூ 3.50 மட்டுமே. கிளிநொச்சி மாவட்டத்தில் ஒருசிலரால் விலைகூட்டி விற்கப்படுவதாக எமது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது விலை இதுதான் என்பதனை தயைகூர்ந்து கவனத்திற் கொண்டு அதிக விலை கொடுக்க வேண்டாமென கேட்டுக் கொள்கின்றோம்.

—நிர்வாகம்

## மண்டைதீவில் பிடித்த இளைஞர் ஊர்காவற்றுறையில் விடுதலை

மண்டைதீவில் இருந்து வாபஸாகி இராணுவத்தினர் வேலணை, ஊர்காவற்றுறை வடக்கு வீதியூடாக நேற்று முன்தினம் நடைபவனியாக வாகனங்கள் சகிதம் சென்றனர்

இவர்கள் இங்கு வரும்போது அல்லைப்பிட்டி, மண்டைதீவு, மண்கும்பான் பகுதிகளில்பிடித்தபதினெட்டு இளைஞர்கள் ஊர்காவற்றுறையில் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டனர். —24 ரு)

## நேற்று வானத்தாக்குதல் இல்லை

யாழ்நகரில் நேற்று எந்த விதமான வானத்தாக்குதல்களும் இடம்பெறவில்லை. வீதிகளில் மக்கள் தாராளமாக நடமாடினார்கள்.

நேற்று விஜயதசமி தினமானதால் தொழில் நிறுவனங்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீன்பிடிப் படகு வேலணையில் கரை ஒதுங்கியது

இந்திய மீன்பிடி ட்ரோலர் படகு ஒன்று வேலணை மண்கும்பான் கடற்கரையில் நேற்று முன்தினம் கரை ஒதுங்கியது.

இதன் படகோட்டியும் அப்படகில் காணப்பட்டார்.

இப்படகு மீன்பிடித்துக் கொண்டிருந்த போது ஸ்ரீலங்கா கடற்படையினர் சுட்டதாகவும், அதில் வந்தவர்கள் இறந்ததாகவும் இப்படகோட்டி மட்டுமே தப்பியதாகவும் தெரிகிறது. 24-ரு

# திருமலையில் சிங்களவர் ஆதிக்கம்; தமிழர்கள் வெளியேறும் நிலையில்

திருகோணமலையில் மீண்டும் சிங்களக்குடியேற்றங்கள் வேகமாக இடம்பெற்று வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் அங்கு பலவருட காலமாக வசித்துவரும் தமிழ் மக்கள் பெரும் அச்சத்துக்கு உள்ளாகியிருப்பதுடன், சில குறிப்பிட்ட பகுதிகளில் வசித்து வந்த தமிழர் அப்பகுதிகளிலிருந்து வெளியேறியும் வருகின்றனர்.

திருமலையில் முன்னர் கோட்டைக்குள் முடங்கிக் கிடந்த சிங்கள மக்கள் தற்போது தாங்கள் ஆரம்பத்தில் குடியேறிய இடங்களில் வீடுகள் அமைத்து வசித்து வருகின்றனர்.

இவர்களின் ஆதிக்கம் அப்பகுதிகளில் அதிகரித்து வருகின்றது. இதனால் சிங்களவர் தற்போது குடியேறி வசித்து வரும் இடங்களில் உள்ள தமிழர்கள் தங்கள் வீடு வாசல்களை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர்.

இதன்காரணமாக இந்த இடம்பெயர்ந்த தமிழர்களின் வீடுகளின் கூரைகள் மற்றும் பெறுமதிமிக்க வீட்டு உபகரணங்களை அபகரித்து இந்தச் சிங்களவர்கள் தாங்கள் புதிய வீடுகள் அமைத்து விடுவதாக அங்கிருந்து வந்த மக்கள் தெரிவிக்கின்றனர். (43கி)

## ஐ. நா. அதிகாரி வீடும் தப்பவில்லை

ஐ. நா. அபிவிருத்தித்திட்ட யாழ். மாவட்டத்தில் மேற்கொண்டுவரும் அபிவிருத்தி, புனரமைப்பு, புனர்வாழ்வு திட்டங்களுக்கு செயல் திட்ட இணைப்பாளராகக் கடமையாற்றும் கெ. சற்குணலிங்கம் குடியிருந்த வீடு விமானத் தாக்குதலால் முற்றாகச் சேதமடைந்துள்ளது.

பிறவுண் வீதியில் உள்ள இந்த வீட்டிலிருந்த அவருடைய குடுமபத்தினர் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

இதுபற்றி அவர் கொழும்பிலுள்ள யூ. என். டி. பி பிரதான காரியாலயத்திற்கு அறிக்கை கொடுத்துள்ளார். (கி)

## இக்கடிதங்கள் உங்களுடையதா?

உரும்பிராய்:- எஸ். சண்முகம் முருகன் லேன் உரும்பிராய் கிழக்கு, சி இராசையா உரும்பிராய் தெற்கு, எஸ். பி. ராஜதுரை, கற்பகப் பிள்ளையார் வீதி உரும்பிராய் வடக்கு, கனகசபை செங்கமலர் உரும்பிராய் தெற்கு, அ. ஜெகதீஸ்வரன் உரும்பிராய் தெற்கு. ஆறுமுகம் கிங்ஸ் அவெனியூ உரும்பிராய் கிழக்கு, என். செல்வரத்தினம் மானிப்பாய் வீதி உரும்பிராய் மேற்கு.

நீர்வேலி:- அன்னலஷ்மி, சிவநாதன், தேவாலய வீதி நீர்வேலி வடக்கு, சின்னத்தம்பி, செல்வரத்தினம் பத்தனை நீர்வேலி தெற்கு, நடராஜா தேவராஜன்-சிவன் கோவிலடி புத்தூர் மேற்கு, சதாசிவம் ஆவரங்கால் மேற்கு புத்தூர்,

அளவெட்டி:- திருமதி கே. கணேசரத்தினம் பிள்ளையார் வீதி அளவெட்டி தெற்கு, பாலலோஜினி, தம்பையா அளவெட்டி தெற்கு, சிவகுமாரன், அகிலராணி அளவெட்டி வடக்கு, திருமதி ஜி சின்னத்தம்பி பதிவாசம் அளவெட்டி தெற்கு, சுந்தரம். நாகராசா சந்தானந்தாலேன் அளவெட்டி வடக்கு. (68கி)

## அகதிகளாக இடம்பெயர்ந்தோரை பாம்புகளும் விரட்டுகின்றன

குருநகர், கரையூர் உட்பட கரையோரப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து மண்ணித்தலை, கௌதாரிமுனை தீவுப் பகுதிகளில் அகதிகளாகத் தங்கியிருந்தோரில் பலர் பாம்புகளினால் தீண்டப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு உடனடியாக சுதேச வைத்தியம் மேற்கொள்ளப்பட்டதனால் உயிராபத்து எதுவுமின்றி காப்பாற்றப்பட்டனர்.

நேற்று முன்தினம் பூநகரி ஆலடிச் சந்தியில் வந்து கொண்டிருந்த பாஷையூரைச் சேர்ந்த பி பவுண்துரை என்பவர் மேலே ஹெலி வருவதைக் கண்டு மரத்தின்கீழ் ஒதுங்கியபோது கோடாலிப் பாம்பினால் கடியுண்டார்.

மேற்குறிப்பிட்ட இடங்களில் தங்கியுள்ள 700க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு எந்தவித சுகாதார வைத்திய வசதிகளும் கிடைக்கவில்லை.

இதேசமயம் 2 வயது குழந்தையொன்று இங்கு வயிற்றோட்டத்தால் மரணமடைந்துள்ளது. 10க்கும் மேற்பட்ட பெண்கள் குழந்தைகளைப் பெற்றெடுத்தனர். இவர்களுக்கு சிகிச்சை நிலையமாக மண்ணித்தலை செபஸ்ரியார் கோவிலே கைகொடுத்துள்ளது. (16,52-கி)

## கிளி. இலங்கைவங்கி இயங்கும்

கிளிநொச்சி இலங்கை வங்கியை மீண்டும் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதன் பொருட்டு கிளிநொச்சி இலங்கை வங்கியில் கடமைபுரியும் சகல ஊழியர்களையும் நாளை முதலாம் திகதி கிளிநொச்சி வங்கிக்குச் சமுகமளிக்குமாறு இலங்கை வங்கியின் மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார். (கி)

## தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

தொண்டராசிரியர்களை நிரந்தரமாக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதற்கான அனுமதியை கல்வி அமைச்சு அரசாங்கத்திடம் கோரியுள்ளது

இத்திட்டத்தின்படி 1989-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் திகதிக்கு முன்னர் ஆகக் குறைந்தது ஒருவருடமாவது தொண்டராசிரியராகக் கடமை புரிந்து தொடர்ந்தும் சேவையாற்றி வருபவர்கள் அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது. (கி)

## மீண்டும் ஆரம்பம்

மானிப்பாயில் இயங்கும் யாழ் போதனா வைத்திய சாலையில் மீண்டும் கண், மனநோய் கிளினிக்குகள் ஆரம்பமாகியுள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கண் கிளினிக் செவ்வாய், வியாழன், சனி ஆகிய தினங்களிலும், மனநோய் கிளினிக் செவ்வாய், வியாழன் ஆகிய இந தினங்களிலும் இடம் பெறுவதாக அறியமுடிகிறது.

தெல்லிப்பளை மாவட்ட வைத்திய சாலையிலும் மனநோய்க்கான சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. (ப-1கி)

## இழக்கில் ஐவர் கொலை

கடந்த வியாழன் மட்டக்களப்பு மாவட்டம் குறிஞ்சாமலையில் இரு தமிழர்கள் ராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்

கன்னங்குடாவைச் சேர்ந்த மாணிக்கம் கந்தகுட்டி (29) சின்னத்தம்பி ஆறுமுகம் (53) ஆகியோரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர்களாவர்.

அம்பாறை விநாயகபுரத்திலும் மூன்று தமிழர் ராணுவத்தினரால் வெட்டிகொலை செய்யப்பட்டு கடலில்போடப்பட்டனர். இவர்களது சடலங்கள் வியாழனன்று கரைசேர்ந்தது. (து)

## யாழ்ப்பாணத்தில் பிறந்தவர்கள் கொழும்பில் பி.சான்றிதழ் பெறலாம்

யாழ்ப்பாணத்தில் பிறந்தவர்கள் கொழும்பில் தமக்குரிய பிறப்புச்சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்வாறு அரசாங்கம் நேற்று விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிறப்புச் சான்றிதழைப் பெறவிரும்பும், யாழ்ப்பாணத்தைப்பிறப்பிடமாகக் கொண்டோர் அதற்கான விண்ணப்பங்களை கொழும்புமாளிகாவத்தையிலுள்ள பதிவாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## 2000 ஊழியர் வேலையிழந்தனர்

அசம்பாவிதங்கள் காரணமாக வர்த்தக ஊழியர்கள் ஏறக்குறைய இரண்டாயிரம் பேர்வரை எதுவித தொழிலுமின்றி அநாதைகளாக நடுவீதியில் நிற்கின்றனர் அவர்களும் அவர்களது குடும்பங்களும் பட்டினியால் சாகும் நிலையில் இருக்கின்றனர்.

இந்நிலையை உணர்ந்து தயவு செய்து வர்த்தக சிப்பந்திகளுக்கு நிவாரணம் பெற்றுத் தருமாறு தாழ்மையாகக் கேட்கின்றோம்

மேற்கண்டவாறு யாழ். வர்த்தக ஊழியர் சங்கத்தின் சார்பாக அதன் தலைவர் திரு இ. சுப்பையா அரசாங்க அதிபர் திரு. அன்ரன்அல்பிரட்டிடம் கையளித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஸ்ரீ)


## சிறுவிளம்பரம்

### புத்தகம்

இயற்கைதரும் இன் மருந்துகள், சிறந்த மருத்துவ நூல், வீட்டில் இருந்தபடியே வைத்தியம் கற்றுக்கொள்ளலாம். விலை ரூ. 52/50. பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர், யாழ்ப்பாணம். 09047

### விற்பனைக்கு

வீடு, காணி, கடைகள் வாகனங்கள், இயந்திரங்கள் ஆகியனவாங்க விற்க வாடகைக்கு விட முழு விபரங்களுடன்தொடர்பு கொள்ளவும் அடம்ஸ் பீக் ட்ரவல்ஸ், முருகன் வீதி, ஆடியபாத வீதி ஊடாக, திருநெல்வேலி வடக்கு. 09103

### சேவை

எம்மிடம் எல்லாவிதமான சாதி, சமயத்திலும், விவசாயிகள் முதற்கொண்டு வர்த்தகர்கள், அரச ஊழியர்கள் வரையிலானமணமக்கள் உண்டு சாதக விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். அடம்ஸ் பீக்ஸ்ட் ரவல்ஸ், முருகன் வீதி, பழஞ்சந்தி அருகாமையில், திருநெல்வேலி வடக்கு. 09104

### விற்பனைக்கு

பயிர்களைத் தாக்கும் பீடைகள், பூச்சிகளிலிருந்து பயிர்களைப் பாதுகாக்க உதவும் இயற்கை பூச்சிநாசினி வேப்பெண்ணெய் ஒரு போத்தல் ரூபா. 80/- மட்டுமே. கொள்கலன் கொண்டு வரவும். மில்க் வைற் - யாழ்ப்பாணம் 09101



## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 19. 01. 1965 மறைவு 30. 08. 1990

பவுலிஸ் றொபின்சன்

(றொபி)

திதி: 30-09-90

30. 08. 90 அன்று அகால மரணமடைந்தார். இவரது ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாவலடி
உடுப்பிட்டி

இங்ஙனம்
தந்தை, தாய், சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர்கள், மைத்துனிமார்கள் சின்னம்மாமார்கள், மருமக்கள், பெறாமக்கள்.

09102



## முக்கிய அறிவித்தல்

இல 363 கஸ்தூரியார் வீதியில், என்னிடம் T.V றேடியோ பழுது பார்ப்பதற்கு கொடுத்துள்ள என் வாடிக்கையாளர்களை 1990-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 08-ம் திகதி (8. 10. 90) காலை 8 00 மணியிலிருந்து காலை 10.00 மணிவரை வந்து உங்கள் பொருட்களை திருத்திய நிலையிலோ அல்லது திருத்தாத நிலையிலோ விரைவாக பொறுப்பேற்றுச் செல்லும்படி மிகவும் மன்றாட்டமாக வேண்டிக்கொள்கின்றேன்.

என்னால் தொடர்ந்து வேலை செய்ய முடியாத நிலையில் உள்ளேன் என்பதை மிகவும் மனவருத்தத்துடன் உங்களுக்கு அறியத்தருகிறேன்.

இப்படிக்கு
உரிமையாளர் ச. சுபாஸ்சந்திரன்
09100



இவ்வாண்டு யாழ் இந்துக்கல்லூரிக்கு நூறாவது ஆண்டு!

செந்தமிழ்நெறி போற்றி வளர்க்கவும்
தெய்வ சிந்தனை ஊட்டி உழைக்கவும்
இந்த மண்ணில் ஓர்சோதி எழுந்தது! — யாழ்
இந்து என்றொரு நாமம் பூண்டது!

# முரசொலி

எமது சிந்தனை

1990 - 09 - 30 ஞாயிறு


''பழம் தேவைப்படும் போது காட்டுமிராண்டி மரத்தைத் தறிப்பான். கொடுங்கோல் அரசும் அதையே செய்கிறது.''

— மொன்ரெஸ்க்யூ

## விசித்திரமான ஒப்பீடு

''இந்திய அமைதிப் படை கையாண்ட அணுகுமுறைகளையே நாம் பின்பற்றுகிறோம்!'' என்று திருவாய் மலர்ந்திருக்கிறார் பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் வஜேரத்தின.

'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்பதுபோல் இருக்கிறது இந்தவாதம்!

பெருமளவு ஷெல்களை ஏவிக்கொண்டு அமைதிப்படை தனது கவச வாகனங்களை நகர்த்தியது உண்மையேயாயினும், பாரிய விமானங்களைப் பயன்படுத்தி மக்கள் நெருங்கி வாழும் பகுதிகள் மீது சக்திமிக்க குண்டுகளை வீசவில்லை.

இந்த விஷயத்தில், அத்துலத்முதலி அவர்களைப் பின்பற்றுகிறேன் என்று ரஞ்சன் கூறியிருந்தால் அதில் உண்மையிருக்கும். பீப்பாய்க் குண்டுகளை வீசுவதில் முன்னோடி என்ற பெருமைக்குரியவர் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் அத்துலத்முதலி.

அதுமட்டுமன்றி, வடமராட்சி ஒப்பரேஷனின் போது நேரடியாகப் பீப்பாய்க்குண்டு வீச்சைக் கண்காணித்த பொறுப்புணர்ச்சி மிக்கவர் முதலி.

பாதுகாப்பு அமைச்சரையும் அரசாங்கத்தையும் நாம் கேட்க விரும்புவது ஒன்றுண்டு:

அமைதிப்படை நடவடிக்கையின்போது தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்படுகிறார்கள் என்று நீங்கள் வடித்த கண்ணீர் முதலைக் கண்ணீரா?

அப்பொழுது பிரதம மந்திரியாயிருந்த தற்போதைய ஜனாதிபதி, மந்திரிசபையின் கூட்டுப் பொறுப்பு வரம்புகளைக் கடந்து - பாராளுமன்றத்திலேயே - வடக்குக் கிழக்கு மக்கள் பட்ட துன்பங்களைப் பட்டியல் போட்டு விளாசித் தள்ளியதெல்லாம் வெற்றுரைகளா?

போகட்டும். இரண்டரை வருடம் இங்கு முகாமிட்டிருந்த அமைதிப்படை கொன்ற பொதுமக்களின் எண்ணிக்கையைவிட மூன்றே மாதத்தில் இலங்கைப் படை'வீரர்' கொன்ற பொதுமக்களின் எண்ணிக்கை அதிகம் என்று மார்தட்டலாமே!

## திலீபன் நினைவாக மரக்கன்றுகள் விநியோகம்

தியாகி திலீபனின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலியும் உண்ணா நோன்பும் தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் நடத்தப்படும் 'அர்ச்சையா' பழச்சாறு தொழிற்சாலை,யில் மௌன அஞ்சலியுடன் ஆரம்பமாகியது.

பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்ட மேற்படி வைபவத்தில் கோப்பாய் பொறுப்பாளர் பாலன் உட்படபலர்உரையாற்றினர்.

இந்நிகழ்ச்சியில் அமரர் திலீபன் நினைவாக பழமரக் கன்றுகளும், மரக்கறி விதைகளும் விநியோகிக்கப்பட்டன. (கி)

## மட்டு - திருமலை தினசரி பஸ் சேவை

திருகோணமலையில் இருந்து மட்டக்களப்பிற்குத் தற்போது தினசரி இரண்டு பஸ் சேவைகள் நடாத்தப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

இந்த இரு சேவைகளும் மட்டுப் படுத்தப்பட்ட சேவைகளாக இராணுவப் பாதுகாப்புடனேயே நடாத்தப்பட்டு வருகின்றன.

ஆனால் பயணிகள் தொகை மிகக் குறைவாக உள்ளதாம். (43 கி)

## உரவிற்பனை முகவர்கள் கூட்டம்

யாழ் மாவட்டத்தில் உள்ள உரம், கிருமிநாசினி விற்கும் அங்கீகாரம் பெற்ற முகவர்கள் எதிர் வரும் இரண்டாம்திகதி காலை 10 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மண்டபத்திற்கு சமுகமளிக்கும்படி தமிழீழ ஆய்வு நிறுவனம் கேட்டுள்ளது.

இக் கூட்டத்தில் வட பகுதிக்கான உரக் கொள்வனவு பற்றி ஆலோசிக்கப்படவுள்ளதாகவும்அறிவிக்கப்பட்டது கி

## இன்று ஆசிரியர் சங்கக் கூட்டம்

அண்மைய பிரச்சினை காரணமாக இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்துள்ள பிற மாவட்ட ஆசிரியர்களின் பிரச்சினை தொடர்பாக இறுதி முடிவொன்றை எடுப்பதற்காக தமிழர் ஆசிரியர் சங்கச்செயற்குழு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 - மணிக்கு சங்கச் செயலாளர் தலைமையில் கோண்டாவிலில் தற்போது தற்காலிகமாக இயங்கும் செயலகத்தில் கூடவுள்ளது. (ப-17 கி)

## மீண்டும் 'ஜிக்கி'

முப்பத்து இரண்டு வருடங்களுக்கு மேலாக தன் தெவிட்டாத தேன் குரலால் ரசிகர் மனதில் நீங்காத இடம்பெற்றுள்ள பாடகி ஜிக்கி(ஹிந்தியில் ஜிக்கி என்றால் குயில் என்று பொருள்) தன் கணவரும் ஈடில்லாப் புகழ்பெற்ற பாடகருமான ஏ எம்.ராஜாவின் திடீர் மறைவினால் ஏற்பட்ட அதிர்ச்சியினின்றும் இப்போது படிப்படியாக நீங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. சென்னை வட்டாரங்கள் இதுபற்றி,'ஜிக்கி இப்போது இசைக்கச்சேரிகள் நடத்த ஒப்புக்கொண்டு வருகிறார்' எனத் தெரிவிக்கின்றன. ராஜா தம்பதியின் இரு மகன்களில் ஒருவர் வக்கீலுக்குப் படித்தவர், மற்றவர் பி எஸ். ஸி படிக்கிறார். தன் கணவர் மறைந்த நாளன்று முழுவதும் அவர் பாடிய பாடல்களை ஒலிபரப்பி அஞ்சலி செலுத்திய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தை ஜிக்கி நன்றியுடன் நினைவுகூருகிறார். (ஸ்ரீ)

# இந்த யுத்தமும், அரசாங்கமும், சிங்களத் தொடர்புச் சாதனங்களும்

## — பிரேமதாச ஆட்சி எதிர்நோக்கும் ஒரு முக்கிய அரசியல் நெருக்குவாரம் பற்றிய சில குறிப்புக்கள்

எமது அரசியல் விமர்சகர்: க .மா. இராசைய

(நேற்றைய தொடர்ச்சி)

### மூன்று சக்திகள்

இந்த யுத்தத்தைப் பொறுத்த வரையில் இது ஆடப்படுவதிலும், ஆடப்படும் முறையிலும் மூன்று சக்திகள் முக்கியமாகத் தொழிற்படுகின்றன. முதலாவது அரசாங்கம், இரண்டாவது பாதுகாப்புப்படையினர், மூன்றாவது சிங்கள உத்தியோகத்தர் குழாம்.

ஜூன் - 11 யுத்தம் தொடங்கிய பொழுது அரசாங்கம் எடுத்த நிலைப்பாடு பின்வரும் முறையில் அமைந்திருந்தது.

1. ''இந்த யுத்தம் இலங்கையின் ஒருமைப்பாட்டையும் பிரிவுபடாத் தன்மையையும் பேணுவதற்கான யுத்தமாகும்''

   அந்தப் பாரிய, உன்னதப்பணியை ''படைவீரப் பெருமக்கள்'' (''வீர செபலயோ'' க்கள்) செய்கின்றனர் என்பது அழுத்திக் கூறப்பட்டது.

2. ''இந்தப் போரானது புலிகளுக்கெதிரானதேயல்லாது தமிழ்மக்களுக்கெதிரானது அல்ல.''

சிங்களப் பத்திரிகைகள் யுத்தத்தைப் பற்றி எழுதியபொழுது இரண்டாவது அம்சம் முக்கியத்துவம் பெறாது முதலாவது அம்சமே முக்கிய இடம் பெற்றது. முற்றிலும் அரசகட்டுப்பாட்டிலுள்ள வானொலியும், தொலைக்காட்சியுமே இரண்டாவதையும் வாயுபசாரமாகவே சொல்லி வந்தன.

இந்த இரண்டு நிலைப்பாடுகளும் நிறைந்த உள்ளார்த்தங்களை உடையவை. அவற்றை விளக்கமாக அறிந்து கொள்வது அவசியம்.

### தமிழரை அடக்க சிங்களப்படை

''படைவீரர்கள் இலங்கையின் பிளவுபடாத் தன்மையைப் பேணும் பெரும்பணியில் ஈடுபட்டுள்ளனர்'' என்ற வாதம் ஜே. வி. பியைப் படை அடக்கிய முறையினால் ஏற்பட்ட கசப்பான அபிப்பிராயங்களை அகற்றி, ''இது ஒரு சிறந்த சிங்களப்படை; தமிழரைத் தாக்கப் புறப்பட்டுள்ளது'' என்ற அபிப்பிராயத்தை மக்கள் மத்தியில் நிலை நிறுத்துவதற்கான ஒரு முயற்சியுமாகும்.

படையினருக்கு இத்தகைய ஒரு தேசாபிமானப் போர்வையைப் போர்த்துவது படையினருக்கும் அரசாங்கத்துக்கும் அத்தியாவசியமாகத் தேவைப்பட்டது. படையினர் 1984-87 போரில் தாமிழந்த ''இனச்சாம்பியன்'' வேடத்தை மீண்டும் பெறவும், அரசாங்கம் சிங்கள இராணுவத்தைக் கொண்டு சிங்கள மக்களைக் கொல்கின்றது என்ற முறைப்பாட்டை அகற்றவும் இந்தயுத்தம் உதவுகின்றது.

### ஒரு சந்தர்ப்பம்

தமக்கு ஏற்கனவே ஏற்பட்டிருந்த அநுபவக்கறைகளை அகற்றி தாம் ஒரு சிறந்த வீரப்படை என்பதை நிரூபிப்பதற்கு இந்த யுத்தம் அவசியமான ஒன்றாகும். அத்துடன் இந்தியா சாதிக்கத் தவறியதைத் தாம் சாதித்துக் காட்டுவோம் என்ற ஒரு நிலைப்பாடுமிருந்தது.

தமிழ்க்குழு ஒன்றினால் தோற்கடிக்கப்பட்ட ஒரு நிலையில் ஓர் அரசியல் அமைப்பை உண்டாக்க எழுவது தவறு என்ற சிங்கள இனவாத உணர்வின் தொழிற்படுகை படையையும் உத்தியோகத்தர்களையும் ஒன்றிணைத்தது.

### உட்கிடை

இந்த யுத்தம் புலிகளுக்கெதிரானதே என்ற கோஷத்தின் உட்கிடக்கை இரண்டு.ஒன்று புலிகளுக்கு எதிராக உள்ள குழுக்களைத் தொடர்ந்தும் தமது கைக்குள் வைத்திருத்தல். அதிலும் பார்க்க முக்கியமான காரணம் புலிகளைத் தோற்கடித்தால், தமிழர் கோரிக்கைகளை அமுல்படுத்த வேண்டிய அரசியல் நிர்ப்பந்தமாயிருக்காது. ஏனெனில் அதன் பின்னர் தமிழர் கோரிக்கைகள் சிங்கள ஸ்திரப்பாட்டை என்றும் பாதிக்கமுடியாது என்பதாகும்.

இதனால் இந்த யுத்தமானது சிங்களப் பேரினவாதத்துக்கு அத்தியாவசியம் தேவைப்பட்ட ஒரு யுத்தமாகவே அமைந்தது. யுத்தப் பிரகடனத்தின் பொழுது ஜனாதிபதி கண்டி பள்ளேக்கலையில் தமது ''கம்உதாவ''த் தர்பாரை நடத்திக்கொண்டிருக்க, பாதுகாப்பு உதவியமைச்சரே பேச வேண்டியனவற்றைப் பேசினார்.

சிங்கள ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கும், ஊனப்பட்டுக் கிடந்த படைக் கௌரவத்தை மீட்டெடுப்பதற்கும். இந்த யுத்தம் அத்தியாவசியப்பட்டது எனலாம்.

### தேசாபிமான யுத்தம்?

எனவே யுத்தம் ஆரம்பமானதும் சிங்கள இனப்பிரச்சினையின் தளமாக அமைந்த தொடர்புச் சாதனங்கள் பீறிட்டுத் தொழிற்பட்டன.

இந்த யுத்தம் ஒரு தேசாபிமான யுத்தம் என்ற கோஷம் தொடர்புச் சாதனங்களிலும் வரன் முறையான தொடர்புச் சாதனங்களல்லாத தொடர்பு முறைமைகள் வழியாகவும் சுவரொட்டிகள், துணியெழுத்துக்கள் (Banners) வழியாகவும் எடுத்துக் கூறப்பட்டன.

திறந்த பொருளாதாரத்தின் ஓரமிசமான விளம்பரமுறைமை இந்த யுத்தத்தினை நியாயப் படுத்தப் பயன்படுத்தப்பட்டது.

### போட்டோ ஜேர்ணலிசம்

தொடர்புச் சாதனங்களும் தொடர்பு முறைகளும் பூரணமாகத் தொழிற்படுத்தப்பட்டன.

''யுத்தம் தொடங்கியபொழுது, முக்கியமான படைநடவடிக்கைகளின்பொழுது பத்திரிகை நிருபர்களும், புகைப்படக்காரரும் கொண்டு செல்லப்பட்டனர். குறிப்பாகக் கிழக்கு மாகாணம் மீட்டெடுக்கப் பட்டது என்று காட்டப்படுவதற்கு ''போட்டோ ஜேர்ணலிசம்'' பயன்படுத்தப்பட்டது.

போரின் தன்மையையும், அதன் சிறப்பையும், அத்தியாவசியத்தையும் உணர்த்துவதற்கு வானொலி, திரைப்படக்கலைஞர்கள் பயன்படுத்தப்பட்டனர். வானொலியில் விசேட பாடல்களும், படைவீரர்களுக்கான விசேட நீங்கள் கேட்டவை நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பப்பட்டன.

(தொடரும்)

## எண்ணிப் பார்க்க...

கணக்குப் பாருங்கள்
எத்தனை ஆயிரம் தலைகள்
காணாமற் போனதென்று ....

எண்ணிப் பாருங்கள்
எத்தனை நூறு கட்டிடங்கள்
எரிந்து போனதென்று....

●

அரசாங்கம் கொடுக்கின்ற
அறிக்கைகளை நம்பாதீர்கள்
எந்த அரசாங்கத்துக்குத்தான்
சரியாக
'எண்ணிப் பார்க்கத்' தெரியும்?

●

தாயும் தந்தையும்
எரிந்து கருகிய
சாம்பலை எடுத்து....

பல் துலக்கிக் கொண்டிருக்கும்
அந்தப்
பச்சைக் குழந்தையின்
கண்களில் பாருங்கள் -
சரியான
கணக்கு எழுதப்பட்டிருக்கிறது!

●

அந்தக்
குழந்தை
கொஞ்சம் வளர்ந்ததும்

படிப்பதற்குப்
புத்தகம் கேட்காது ...
பிடிப்பதற்கு .... .... !

- பேத்தா

# குப்பிவிளக்கு சரிந்து தீப்பற்றியது; தாய் பலி; குழந்தை தீக்காயம்

குப்பி விளக்கு சரிந்து வீழ்ந்து தீப்பற்றியதால் நித்திரையிலிருந்த குடும்பப் பெண்மணி ஒருவர் பலியானார். அவருடன் படுத்திருந்த ஒன்பது நாள் கைக்குழந்தை படுகாயமுற்ற சம்பவம் கடந்த புதன்கிழமை அதிகாலை மாதகலில் நிகழ்ந்துள்ளது.

ஏழு பிள்ளைகளின் தாயான வினாயகமூர்த்தி அன்னக்கிளி (37) என்பவரே இச்சம்பவத்தில் மரணமானவராவர்.

இவரது கைக்குழந்தைக்கு முகம், நெஞ்சு முழுவதும் கடுமையான தீக்காயங்கள் ஏற்பட்டுள்ளன. ப-21-கி

# மாதகலில் திண்ணை பாடசாலை

மாதகல் மேற்கு சிற்றூர் அவை, மாதகல் கிழக்கு சிற்றூர் அவை ஆகியன இணைந்து மாதகல் கிராமத்தில் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக 11 திண்ணைப் பள்ளிக்கூடங்களை ஆரம்பித்துள்ளன.

கல்வித் திணைக்களம் நடாத்தும் பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும் இக்கால கட்டத்தில் இந்த திண்ணைப் பள்ளிக் கூடங்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பேருதவியாக இருக்குமென்று பெற்றோர் தெரிவிக்கின்றனர். 13-ரு

# களஞ்சியங்களில் உரம் இல்லை 6500 மெற்றிக் தொன் தேவை

யாழ். மாவட்டத்தில் இவ்வருடம் பெரும்போக நெற்செய்கையை ஆரம்பிக்க குறைந்தது 6500 மெட்ரிக் தொன் உரம் உடனடியாகத் தேவையெனக் கணிக்கப்பட்டுள்ளது.

காலபோகநெற்செய்கைக்கு 2000 மெட்ரிக்தொன் வி-1 அடிக்கட்டு உரமும், 2500 மெட்ரிக்தொன் ரி. டி. எம் உரமும், 2000 மெட்ரிக் தொன் யூரியாவும் தேவைப்படுகின்றது.

ஆனால் கடந்த நான்கு மாதகாலமாகப் போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டுள்ளதினால் வடக்கிலுள்ள சகல உரக்களஞ்சியங்களும் காலியாகவேயுள்ளன. இதனால் காலபோக நெற்செய்கைக்கு உர வகைகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

இந்த உர வகைகளை அக்டோபர் மாதம் முதலாம் வாரத்திற்கு முன் விவசாயிகளுக்கு விநியோகிக்காவிடின் யாழ். மாவட்டத்தில் இம்முறை காலபோக நெற்செய்கை பாதிக்கப்படுமென யாழ். விவசாய பணிப்பாளர் கே. குணரட்ணம் அனுராதபுரத்திலுள்ள வட பிராந்திய சந்தைப்படுத்தல் அதிகாரிக்கு அனுப்பி வைத்துள்ள அவசர கோரிக்கையில் தெரிவித்துள்ளார். (34 கி)

யாழ் இந்துக்கல்லூரி நூற்றாண்டுவிழாவில் அதிபர்

# கோட்டையைப் பிடித்த வேளை இது ஓர் எழுச்சி விழாவாகிறது

''கோட்டையைப் பிடித்துத் தமிழர்கள் தலை நிமிர்ந்து நிற்கும் இவ்வேளையில் தமிழர் வாழ்வின் வளர்ச்சிக்கு அச்சாணியாக எமது கல்லூரி நூற்றாண்டு விழா தமிழர் எழுச்சி விழாவாகவும் அமைகின்றது.''

இவ்வாறு யாழ். இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவுக்கு நேற்றுத் தலைமைவகித்துப் பேசுகையில் அதிபர் திரு. கே. எஸ். குகதாசன் கூறினார்.

இவ்விழா ஞானவைரவர் கோயில் பூசையுடன் ஆரம்பமாகி அமைதியாகவும், எளிமையாகவும் நடைபெற்றது.

பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு. எஸ். டிவகலாலா பேசுகையில் ''கல்லூரி எதிர்கால சந்ததியைப் பயனுள்ளவகையில் உருவாக்க உறுதுணையாகின்றது. இந்த வகையில் இந் நூற்றாண்டு மாணவனாக தியாகி திலீபனை இக் கல்லூரி பிரதிபலிக்கின்றது'' என்றார்.

முன்னாள் உப அதிபர் திரு. கே. சிவராமலிங்கம் பேசுகையில் ''வரலாற்று நோக்கில் கல்லூரி உருவாக்கத்திற்கு எதிர்நோக்கிய சம எதிர்ப்புகளை உணர்வோமானால் இக்கல்லூரியின்வளர்ச்சியினைத் தொடர்ந்து பேணுவதன் அவசியம் உணரப்படவேண்டும்'' என்றார்.

கல்லூரி அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. கே. பூபாலசிங்கம் தனது உரையில்.

''யாழ். இந்துக் கல்லூரி பல்வேறு அரிய சாதனைகளை உருவாக்கி தனித்துவம் பெற்றதாகத் திகழ்கின்றது. அதன் மகத்துவம் நாடளாவியது. இதன் நூற்றாண்டுவிழாவை மிக விமரிசையாகக் கொண்டாட எண்ணியிருந்த போதிலும் சூழ்நிலை அதற்குச் சாதகமாக அமையவில்லை. எனினும் எமது எண்ணப்பாடு, திட்டங்கள் முதலானவை நூற்றோராவது வருடத்தில் பூரண பெருமை பகர்வதாக அமையும் என்ற நம்பிக்கை உண்டு' என்றார்.

யாழ். கோட்டக்கல்வி அதிகாரி திரு. சி. தியாகராஜா பேசுகையில் ''இந்துமதத்தின் அன்புநெறியில் மதரீதியாகவும், மொழிரீதியாகவும், பாதுகாக்கும் எமது கல்லூரித் தாயை எவரும் எதுவும் செய்ய முடியாது' என்றார்.

கல்வியதிகாரி திரு. ஏ. தங்கராஜா, பாடசாலை மாணவன் செல்வன். எஸ். அறிவழகன் ஆகியோரும் பேசினர்.

திரு. சி. கே. விசாகரத்தினம் நன்றியுரை நிகழ்த்தினார்.

முன்னதாக 18 குழந்தைகளுக்கு அதிபர் ஏடுதொடக்கி வைத்தார். 72-16-ஸ்ரீ

# இடம்பெயர்ந்தவர்களுக்கு அரிசி மட்டுமே நிவாரணம்

கைதடி கூட்டுறவுச் சங்க கிளைகளில் நிவாரணப் பொருட்கள் வழங்குவதில் இடம்பெயர்ந்த 'அகதிகள் புறக் கணிக்கப்படுகிறார்கள் எனப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கான நிவாரணத் தொகைக்கு அரிசி மட்டுமே வழங்கப்படுகிறது. மா, சீனி, தீப்பெட்டி போன்ற அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படவில்லை எனவும் இப்பொருட்கள் அப்பகுதிகளில் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு மட்டுமே வழங்கப்படுவதாகவும் அகதிகள் கவலை தெரிவிக்கின்றனர். (71து)

## விழுந்து மரணம்

கள் இறக்குவதற்காக தென்னையில் ஏறிய சீவல் தொழிலாளி ஒருவர் தென்னை உச்சியிலிருந்து தவறி வீழ்ந்து மரணமான சம்பவம் அச்சுவேலியில் இடம்பெற்றது. (ப-24 கி)

# இலவச பங்கீட்டு பொருள் விநியோக புதிய அட்டவணை விபரங்கள்

| உணவுப்பொருள் | ஒரு அங்கத்தவர் | | | இரண்டு அங்கத்தவர் | | | மூன்று அங்கத்தவர் | | | நான்கு அங்கத்தவர் | | | ஐந்தும் அதற்கு மேற்பட்ட அங். | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கிலோ | ரூ. | ச. | கிலோ | ரூ. | ச. | கிலோ | ரூ. | ச. | கிலோ | ரூ. | ச. | கிலோ | ரூ | ச |
| அரிசி | 2 | 26 | 00 | 4 | 52 | 00 | 5 | 65 | 00 | 6 | 78 | 00 | 8 | 104 | 00 |
| மா | 1 | 14 | 25 | 2 | 28 | 50 | 2½ | 35 | 75 | 3 | 42 | 75 | 3 | 42 | 75 |
| சீனி | ½ | 15 | 00 | 1 | 30 | 00 | 1 | 30 | 00 | 1½ | 45 | 00 | 2 | 60 | 00 |
| பருப்பு | 1/4 | 10 | 00 | 1/2 | 20 | 00 | ½ | 20 | 00 | 3/4 | 30 | 00 | 1 | 40 | 00. |
| பால் மா | — | — | — | — | — | — | 1 | 40 | 40 | 1 | 40 | 40 | 1 | 40 | 40 |
| தீப்பெட்டி / மெழுகுதிரி / சோப்வகை / கறிச்சரக்கு | — | 18 | 75 | — | 23 | 50 | — | 18 | 85 | — | 15 | 85 | — | 27 | 85 |
| மொத்தப்பெறுமதி | | 84 | 00 | | 154 | 00 | | 210 | 00 | | 252 | 00 | | 315 | 00 |

## வாசுதேவா...

லவேண்டாம் என வாசுதேவ கூறிய போது அமைச்சருக்கும் வாசுதேவ நாணயக்காரவுக்கும் இடையில் ''விசரன்'' ''வாயைமூடு'' ''வெளியாலே போ' நரகத்திற்குப்போ என்ற சொற் பிரயோகங்கள் பாவிக்கப்பட்டன.

விடுதலைப்புலிகளின் ஆதரவாளர் என்று அமைச்சர் ரஞ்சன் வாசுதேவ நாணயக்காரவை குற்றம் சாட்டினார்.

நீங்கள் இரத்தக் கடலில் நாட்டை மூழ்கடிக்க முயற்சிக்கிறீர்கள் என வாசுதேவ கூறினார்.

## நெடுந்தீவு

இந்த சேவையில் ஈடுபட்ட இரு படகுகளையும் நயினாதீவுக் கடற்படையினர் தம்வசம் வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த படகுச்சேவையின்றி நெடுந்தீவு மக்கள் படும் கஷ்டங்கள் குறித்தும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. (19-ரு)

## குரங்குகள் அட்டகாசம்

மீசாலை தெற்கில் குரங்குகளின் தொல்லை பெரிதும் மோசமாகியுள்ளன. இப் பகுதியில் தற்போது விவசாயப் பயிர்கள் உற்பத்தி செய்யும் வேளையில் குரங்குகளால் பெரும் பயிரழிவு ஏற்படலாமென நம்பப்படுகிறது. (ப 3 ரு

## திருமலை...

வீட்டை சோதனையிடும் பொழுது அந்தப் பெயர்ப் பட்டியலில் இல்லாதவர்கள் எவரும் அவ் வீட்டில் இருந்தால் அவர்களும் வீட்டு உரிமையாளரும் விசாரணைக்காக அழைத்துச் செல்லப் படுவார்கள்.

அத்துடன் பெயர்ப்பட்டியலில் உள்ளவர்களில் குறைவாக இருந்தாலும் விசாரணைக்கு அழைத்துச் செல்லப் படுவார்கள். (43 கி)

## முக்கிய அறிவித்தல்

பொதி சுமக்கும் வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் ஆலோசனைக் கூட்டம் (30-9-1990) இன்று ஞாயிறு பி, ப. 3-00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் நடைபெறும், சகல பொதி சுமக்கும் வாகன உரிமையாளர்களும் தவறாது சமுகமளிக்கவும்.

வ. பி. லொறி போ, வ. சங்கம்

09105

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 30-09-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

## கோட்டையில்...

பீரங்கி குண்டு - 6, ஆர். பி. ஜி. ஷெல் - 4, ஐந்து அங்குல ஷெல் - 4, டொங்கான் ஷெல் - 1, ரவைகள் - 8600, ஜே ஆர். கிரனேட் - 41, 81 எம். எம் பூஸ்டர் - 350, 5 அங்குல பூஸ்டர் - 25. து

## இலவச...

பூட்டி இலவச உணவு விநியோக திட்டத்தை தாமதப் படுத்துவதை உணரமுடிகிறது

எனவே போராட்ட கால சூழ்நிலையை உணர்ந்து கூட்டுறவு சங்க கிளைகளை லீவு நாட்கள் உட்பட முழுநாளும் திறந்து 7. 10. 90க்கு முன்பு தற்போது நடைமுறையில் இருக்கும் இலவச உணவுப் பொருள் விநியோகத்தை முடிக்குமாறு சகல கூட்டுறவுச் சங்கங்களையும் கேட்கிறோம் எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 66 ரு

## நகர...

ஈடுபட்டனர்.

குருநகர் பகுதியில் பல வீடுகளில் கொள்ளைச் சம்பவங்கள் இடப்பெற்றுள்ளதாக குருநகர் மக்கள் தெரிவிக்கின்றனர். ப-25-71-ரு

## யாழ்...

களைப் பெறுவோர்களை ஐந்து தொகுதிகளாக்கி அதன்படி உணவுப் பொருட்கள் பங்கிடு செய்யப்படவுள்ளன.

ஏற்கனவே இலவச உணவுப் பொருட்களைப்பெற்றுக் கொண்டவர்கள், இன்றுமுதல் நடைமுறைப்படுத்தப்படும் இப் பங்கீட்டு அளவுக்கு குறைவாக பொருட்களைப் பெற்றிருந்தால் குறிப்பிட்ட பெறுமதியான அளவுக்கு மிகுதிப்பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஐந்து பேருக்கு மேற்பட்டவர்கள் ஒரு குடும்பத்தில் இருந்தால்சில்லறைப்பொருட்களுக்காக ஒதுக்கப்பட்ட பெறுமதிக்கு இரண்டு கிலோ வெள்ளைப்பச்சை அரிசியை விரும்பினால் மேலதிகமாக பெற்றுக் கொள்ள முடியும்

எனவே ஐப்பசி மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னதாக இந்த முறையிலான உணவுப் பங்கீட்டு பொருட்களை பாவனையாளர் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்கப்படுகின்றனர்.

இதேவேளை ஆயிரத்து ஐநூறு ரூபாவுக்கு மேற்பட்ட வருமானம் பெறுவோர் இதே பங்கீட்டு அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பெறுமதியான பொருட்களை ரொக்கப்பணத்திற்கு இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த கட்ட இலவச விநியோகம் 11 ஆம் திகதியில் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் அரசாங்க அதிபர் அதிகாரிகளை கேட்டுள்ளார். (66ரு

## நேற்று ...

கள், ஆலயங்கள், வீடுகள், பாடசாலைகள் என்பவற்றில் பூஜைகள், ஏடு தொடக்கல் என்பன அமைதியாகவும் சிறப்பாகவும் நடைபெற்றன (66-ரு)

## சங்குப்பிட்டிக்...

டிக்கப்பட்ட படகில் கொண்டு செல்லப்பட்ட சைக்கிள்களாக இவையிருக்கலாமெனக் கருதப்படுகின்றது.

உரியவர்கள் தகுந்த அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்படுகின்றது. (கி)